8th November 1966]

Import of books

* 463 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Madras University is importing standard technical and scientific books from abroad with direct import licence from the Central Government; and

(*b*) if so, the details there of?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Two import licences were obtained by the University of Madras for import of scientific and technical books of a value of Rs. 14,500 during the Third Plan period.

District administration

* 464 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have appointed any Committee to study district administration in the State; and

(*b*) if so, the nature and scope of its functions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A brief note[a] on the scope and functions of the Committee has been placed on the table of the House.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டியில் எதிர்க் கட்சியைச் சேர்ந்த தலைவர்களை நியமிப்பதுபற்றிக் கலந்து பேசப்பட்டதா? இல்லை என்றால், அதற்கான காரணம் என்ன? அவர்கள் இந்தக் கமிட்டியில் இடம் பெருததற்கு விசேஷ காரணங்கள் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கமிட்டி கட்சி ரீதியில் அமைக்கப்படவில்லை.

திரு. து. ப. அழகமுத்து : இந்தக் கமிட்டி இடைக்காலமாக ஏதாவது ஆலோசனை கூறியிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கமிட்டி பல பிரச்னைகளைப் பற்றி ஆராய்ந்து விவாதித்துக் கொண்டிருக்கிறது.

அரசு ஊழியர்களுக்குக் கூட்டுறவு பண்டகசாலைகள்

* 490 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : திரு. வை. சங்கரன் : } கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க ஊழியர்களுக்காக கூட்டுறவு மளிகைக் கடைகள் திறக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசிலனையிலுள்ளதா?

---

a Printed as Appendix IV on pages 719–722.

[8th November 1966

(இ) ஆம் எனில், எப்பொழுது, எங்கெங்கு திறக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) அவற்றில் அங்கத்தினராக வேண்டியவர்களது தகுதி, பங்குத் தொகை மூலதனம் முதலியவைகளின் விவரம் என்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) &(இ) நமது மாநிலத்தில் பற்பல இடங்களில் மாநில அரசாங்க ஊழியர்களுக்கென்றே பயன் கொள்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளை அரசாங்கம் ஏற்கெனவே நிறுவியுள்ளது. எந்தெந்த இடங்களில் இப்பண்டகசாலைகள் தேவையென்று உணரப்படுகிறதோ அந்த இடங்களில் எல்லாம் அவை மேற்கொண்டும் நிறுவப்படும்.

(உ) அரசாங்க ஊழியர் ஒவ்வொருவரும் உரிய பங்குத் தொகையைச் செலுத்துவதன்மேல் பண்டகசாலையில் உறுப்பினராக சேர்த்துக்கொள்ளப்படுவார். ஒரு பங்கின் மதிப்பு சாதாரணமாக ரூ. 5 அல்லது ரூ. 10 ஆக நிச்சயிக்கப்படுகிறது. பங்குத் தொகையை உறுப்பினர்கள் எளிய தவணைகளில் செலுத்துவதற்காக சென்னை மாநகரில் உள்ள பண்டகசாலைச் சங்கங்கள் அவர்களுக்குக் கடனுக்கு விற்ற பண்டகங்கள் விலையை அவர்களிடமிருந்து வசூலிக்கும்போது பங்குகளின் மதிப்பை இரண்டு தவணைகளில் (ஒவ்வொன்றும் 5 ரூபாயாக) வசூலிக்கின்றன.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, எத்தனை அங்கத்தினர் அல்லது எவ்வளவு ஷேர் காப்பிட்டல் இருந்தால் இந்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் அமையத் தோதாக இருக்கும் ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : ஷேர் காப்பிட்டல் என்பது ஒவ்வொருவரும் ரூ. 5 அல்லது ரூ. 10 கொடுக்க வேண்டும். அந்த அளவில் 20-30 பேர்கள் இருந்தால் ஒரு சங்கத்தை நிறுவலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், இந்த ஸ்டோர்களில் சர்க்கார் ஏதாவது பங்கு எடுத்திருக்கிருர்களா? தாலுகாதோறும் அரசாங்க சிப்பந்திகளுக்காக ஸ்டோர் நிறுவ அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறதா ? அத்தகைய ஏற்பாடு செய்ய முனைவார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : இது போன்ற சங்கங்கள் இப்போது இருபத்திஎட்டு இருக்கின்றன. மெட்ராஸ் ஸிட்டி, மற்றும் டிஸ்ட்ரிக்ட் வாரியாக இருக்கின்றன. முன்பு நான் முக்கிய கேள்விக்கு பதில் சொன்னது போல இன்னும் தேவைப்படும் இடங்களிலெல்லாம் வைப்பது என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இவர்கள் ஷேர் போட்ட பிறகு அரசாங்கம் எவ்வளவு கடன் கொடுக்கிறது என்று அறியலாமா ?

கனம் திரு ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. இந்தச் சங்கங்களை முன் ஃந்து வசூல் செய்யும்போது, இரண்டு தவணைகளில் வாங்கும் முறையில் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. மத்திய பாங்கிலிருந்து தொகை கொடுப்பார்கள். அதை வைத்துக்கொண்டு அந்த ஸ்டோர்கள் தவணை முறையில் வசூல் செய்கின்றன.

திரு. கோ. சி. மணி : மளிகைக் கடைகள் போன்றவைகள், அரசாங்கத்தின் மூலம் வினியோகிக்கப்படும் நிர்ணய விலைப் பண்டங்களைப் பொருத்த வரையில் அனுபவமும், நீண்ட நாட்களாக உள்ளதுமான கடைகளுக்கு மட்டும்தான் அந்தப் பொருள்கள் கொடுக்கப்படும் என்ற முறை வைத்திருக்கிறார்கள். தற்போது கூட்டுறவு முறையில் தொழிலாளர்களுக்காக நடத்தப்படும் பண்டகசாலைகளுக்கும் அரசாங்கத்தின் மூலம் வினியோகிக்கும் முன் அனுபவமில்லாவிட்டாலும் பொருள்களைக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இந்தச் சங்கங்களை ரிஜிஸ்டர் செய்து ஆரம்பித்தால் தேவையான பொருள்களைக் கொடுக்கவேண்டும் என்பதுதான் அடிப்படைக் கருத்து.

Co-operative Department

* 491 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to reorganise the administration of the Co-operative Department in the State; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

நீதித்துறை அதிகாரிகள்

* *492* **கேள்வி.**—திரு. செ. மாதவன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நீதித்துறையில் பணிபுரியும் மாவட்ட நீதிபதி, துணை நீதிபதி, மாவட்ட முன்சீப், மாஜிஸ்ட்ரேட்டுகள் ஆகியோருக்கு ஊதிய உயர்வும், வீட்டு வசதியும் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மாவட்ட நீதிபதிகள், முதல் வகுப்பு கூட்டு மாஜிஸ்ட்ரேட்டு, சப்-மாஜிஸ்ட்ரேட்டுகள் நீங்கலாக நீதித்துறை அதிகாரிகளின் சம்பளத்தை உயர்த்துவது பற்றி தலைமை நீதிபதிகள் மாநாட்டில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகைக்கு விடுதல்—வாடகைக் கட்டுப்பாட்டுச், சட்டத்தின் கீழ் தமிழ்நாடு இட வசதி கட்டுப்பாடு

---

[a] Printed as Appendix V on pages 722–723.